*கவனிக்க.-2023.10.06 ஆந் திகதிய 2354 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2354 - 2023 ඔක්තෝබර් මස 13 වැනි සිකුරාදා - 2023.10.13

*2354 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2164 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**கவனிக்க.**- (i) ஒதுக்கீடு சட்டமூலம் 2023, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) நிதி சட்டமூலம் 2023, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, நவெம்பர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


2161-B 82504-5,441 (2023/10)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தரக் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவிடம் நேரடியாக கடற்படை வீரர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான வெற்றிடங்கள்

## VACANCIES FOR SAILORS IN THE ARTIFICER (DIRECT ENTRY) BRANCHES OF SRI LANKA REGULAR NAVAL FORCE

1. இலங்கை நிரந்தரக் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவிடம் நேரடியாக கடற்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர கடற்படையில் இணைவதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளை கட்டாயமாக பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அ. குடியுரிமை - இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ. வயது - 2023, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 33 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

இ. உயரம் - 5 அடி 5 அங்குலத்துக்கு குறையாதிருத்தல் வேண்டும்.

ஈ. நிறை - 47 கிலோ கிராமிற்கு (105 இறாத்தல்) குறையாதிருத்தல் வேண்டும்.

உ. மார்பு - 32 அங்குலத்துக்கு குறையாதிருத்தல் வேண்டும்.

ஊ. பார்வை - வர்ணப்பதிவு - எஸ்ரிடி II

எ. தொலைப் பார்வை - இடது கண் 6/6 மற்றும் வலது கண் 6/6 (மூக்குக்கண்ணாடி மற்றும் கண்ணாடி வில்லையின்றி)

ஏ. குடியியல் நிலை - விண்ணப்பதாரர்கள் திருமணமான/திருமணமாகாத இரு தரப்புகளும் விண்ணப்பிக்கலாம்

3. **ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பிரிவுகள் :**

அ. எந்திர அறை தொழில்வினைஞர் (Engine Room Artificer)

ஆ. மோட்டார் வாகன தொழில்வினைஞர் (Automobile Artificer)

இ. மின்னியல் தொழில்வினைஞர் Electrical Artificer–(மின் உற்பத்தி, விநியோகம், கட்டுப்பாடு மற்றும் தன்னியக்கம்)

ஈ. வானலை தொழில்வினைஞர் (Radio Electronic Artificer) – (இலத்திரனியல் மற்றும் தொலைபேசி/ தரவு தொடர்பாடல் துறைக்காக)

4. **கல்வித் தகைமைகள் :**

அ. க. பொ.த. (சா. தர) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் கணிதம், தாய்மொழி, விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்திகள் மற்றும் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி சகிதம் 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. க. பொ.த. (உயர் தர) பரீட்சையில் (ஒரே அமர்வில்)

1. **கணித விடய துறை** - இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியல் பொருட்டு சாதாரண சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும். (எந்திரஅறை தொழில்வினைஞர் (Engine Room Artificer) மற்றும் மோட்டார் வாகன தொழில்வினைஞர் (Automobile Artificer)

2. **தொழில்நுட்ப விடய துறை** - தொழில்நுட்பவியலுக்காக விஞ்ஞானம் மற்றும் பொறியியல் தொழில்நுட்பவியலுக்காக சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (எந்திர அறை தொழில் வினைஞர் (Engine Room Artificer) மற்றும் மோட்டார் வாகன தொழில்வினைஞர் (Automobile Artificer)

3. **கணித விடய துறை அல்லது உயிரியல் விடய துறை அல்லது தொழில்நுட்ப விடய துறை** - இரண்டு சாதாரண சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும். மின்னியல் தொழில்வினைஞர் (Electrical Artificer) – வானலை தொழில்வினைஞர் (Radio Electronic Artificer)

5. **தொழில்சார் தகைமைகள் :**

அ. **எந்திர அறை தொழில்வினைஞர்** (Engine Room Artificer) (**வகுப்பு** III)

(1) NVQ V/VI மட்டத்தில் கப்பற் அல்லது எந்திர பொறியியல் டிப்ளோமா கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**விசேட தகைமைகள் -**

(அ) கப்பல் நடவடிக்கைகள் தொடர்பாக பொறியியல் பிரிவில் தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா (NDT) வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) எந்திர பொறியியல் பிரிவில் உயர் தேசிய டிப்ளோமா வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) கப்பற் பொறியியல் பிரிவில் பொறியியல் தொடர்பான தேசிய டிப்ளோமா (NDES) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) எந்திரப் பிரிவில் தொழில்நுட்பம் மற்றும் கல்வி தொடர்பான தேசிய டிப்ளோமா வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(உ) மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது அதற்கு இணையான தகைமைகளை வழங்கும் ஆற்றல் உள்ள நிறுவனமொன்றில் (அரசாங்கம் அல்லது தனியார்) NVQ V/VI மட்டத்தில் கப்பல் அல்லது எந்திர டிப்ளோமா கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கம் அல்லது தனியார் துறை நிறுவனமொன்றில் ஏற்புடைய துறையில் மூன்று ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆ. **எந்திர அறை தொழில்வினைஞர்** (Engine Room Artificer) (**வகுப்பு** IV)

(1) NVQ V/VI மட்டத்தில் கப்பல் அல்லது எந்திர பொறியியல் டிப்ளோமா கற்கைநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**விசேட தகைமைகள் -**

(அ) கப்பல் நடவடிக்கைகள் தொடர்பாக பொறியியல் பிரிவில் தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா (NDT) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) எந்திர பொறியியல் பிரிவில் உயர் தேசிய டிப்ளோமா வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) கப்பற் பொறியியல் பிரிவில் பொறியியல் தொடர்பான தேசிய டிப்ளோமா (NDES) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) எந்திரப் பிரிவில் தொழில்நுட்பம் மற்றும் கல்வி தொடர்பான தேசிய டிப்ளோமா வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(உ) மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது அதற்கு இணையான தகைமைகளை வழங்கும் ஆற்றல் உள்ள நிறுவனமொன்றில் (அரசாங்கம் அல்லது தனியார்) NVQ V/VI மட்டத்தில் கப்பல் அல்லது எந்திர டிப்ளோமா கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கம் அல்லது தனியார் துறை நிறுவனமொன்றில் ஏற்புடைய துறையில் ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

இ. **மோட்டார் வாகன தொழில்வினைஞர்** (Automobile Artificer)(**வகுப்பு** III)

(1) NVQ V/VI மட்டத்தில் தானியங்கி (Automobile) பொறியியல் டிப்ளோமா கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**விசேட தகைமைகள்** -

(அ) எந்திர பொறியியல் பிரிவில் தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா (NDT) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) தொழில்நுட்ப பயிற்சி நிறுவனமொன்றால் (TTI) தானியங்கி (Automobile) பொறியியல் பிரிவில் டிப்ளோமா கற்கைநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) குளியாப்பிட்டிய பல்கலைக்கழகம் மூலம் தானியங்கி (Automobile) தொடர்பான தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் மூலம் தானியங்கி (Automobile) பொறியியல் டிப்ளோமா வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(உ) ஒருகொடவத்தை தானியங்கி (Automobile) பொறியியல் பயிற்சி நிறுவனம் மூலம் தானியங்கி தொடர்பான பொறியியல் கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஊ) மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது அதற்கு இணையான தகைமைகளை வழங்கும் ஆற்றல் உள்ள நிறுவனமொன்றில் (அரசாங்கம் அல்லது தனியார்) NVQ V/VI மட்டத்தில் தானியங்கி (Automobile) பொறியியல் டிப்ளோமா கற்கைநெறி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கம் அல்லது தனியார் துறை நிறுவனமொன்றில் ஏற்புடைய துறையில் மூன்று ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஈ. **மோட்டார் வாகன தொழில்வினைஞர்** (Automobile Artificer) (**வகுப்பு** IV)

(1) NVQ V/VI மட்டத்தில் தானியங்கி (Automobile) பொறியியல் டிப்ளோமா கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**விசேட தகைமைகள்** -

(அ) எந்திர பொறியியல் பிரிவில் தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா (NDT) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) தொழில்நுட்பபயிற்சி நிறுவனமொன்றால் (TTI) தானியங்கி (Automobile) பொறியியல் பிரிவில் டிப்ளோமா கற்கைநெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல்வேண்டும்.

அல்லது

(இ) குளியாப்பிட்டிய பல்கலைக்கழகம் மூலம் தானியங்கி (Automobile) தொடர்பான தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் மூலம் தானியங்கி (Automobile) பொறியியல் டிப்ளோமா வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(உ) ஒருகொடவத்தை தானியங்கி (Automobile) பொறியியல் பயிற்சி நிறுவனம் மூலம் தானியங்கி தொடர்பான பொறியியல் கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஊ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்சார் கல்வி ஆணைக்குழுவால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது அதற்கு இணையான தகைமைகளை வழங்கும் ஆற்றல் உள்ள நிறுவனமொன்றில் (அரசாங்கம் அல்லது தனியார்) NVQ V/VI மட்டத்தில் தானியங்கி (Automobile) பொறியியல் டிப்ளோமா கற்கைநெறி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கம் அல்லது தனியார் துறை நிறுவனமொன்றில் ஏற்புடைய துறையில் ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

உ. **மின்னியல் தொழில்வினைஞர்** (Electrical Artificer) (**வகுப்பு** IV)

(1) NVQ V மட்டத்தில் மின் பொறியியல்/மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல்/தொழில்நுட்ப தன்னியக்கம்/ எந்திர இலத்திரனியல் பொறியியல் டிப்ளோமா கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**விசேட தகைமைகள்**–

(அ) தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா (NDT) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDF) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) பொறியியல்தேசிய டிப்ளோமா (NDES) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) தொழில்நுட்பம் மற்றும் கல்வி தொடர்பான தேசிய டிப்ளோமா வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(உ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்சார் கல்வி ஆணைக்குழுவால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் அல்லது அதற்கு இணையான தகைமைகளை வழங்கும் ஆற்றல் உள்ள நிறுவனமொன்றில் (அரசாங்கம் அல்லது தனியார்) NVQ V/VI மட்டத்தில் மின்பொறியியல்/ மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல்/ தொழில்நுட்ப தன்னியக்கம்/ எந்திர இலத்திரனியல் பொறியியல் டிப்ளோமா கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கம் அல்லது தனியார் துறை நிறுவனமொன்றில் ஏற்புடைய துறையில் ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஊ. **வானலை தொழில்வினைஞர்** (Radio Electronic Artificer) (**வகுப்பு** IV)

(1) NVQ V மட்டத்தில் இலத்திரனியல் பொறியியல்/ தொலை தொடர்பு பொறியியல்/ வலையமைப்பு போன்ற பிரிவுகளில் டிப்ளோமா கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**விசேட தகைமைகள்**–

(அ) தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா (NDT) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDF) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) பொறியியல் தேசிய டிப்ளோமா (NDES) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) தொழில்நுட்பம் மற்றும் கல்வி தொடர்பான தேசிய டிப்ளோமா வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(உ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்சார் கல்வி ஆணைக்குழுவால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது அதற்கு இணையான தகைமைகளை வழங்கும் ஆற்றல் உள்ள நிறுவனமொன்றில் (அரசாங்கம் அல்லது தனியார்) NVQ V/VI மட்டத்தில் இலத்திரனியல் பொறியியல்/மின் தொலைதொடர்பு பொறியியல்/ வலையமைப்பு போன்ற, பொறியியல் டிப்ளோமா கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கம் அல்லது தனியார் துறை நிறுவனமொன்றில் ஏற்புடைய துறையில் ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

6. மேற்குறித்த 2 மற்றும் 4 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்தவுடன் உயரம், நிறை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உயரம், நிறை, பார்வை மட்டம் ஆகியவற்றைக் கொண்டிராதவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள். தேர்வுநாடியின் உயரம் உரிய அளவில் இல்லா திருத்தினும் கடற்படைக்கு நன்மை பயக்கும் விசேட தொழில் திறமை பெற்றிருப்பின் கடற்படை தளபதியின் அனுமதியுடன் அவரைப் பற்றி கவனத்தில் எடுக்கப்படும்.

**7. சேவை நிபந்தனைங்கள் :**

அ. விண்ணப்பதாரிகள் தொழில்வினைஞர் பிரிவில் III மற்றும் IV ஆகிய வகுப்புகளின் கடற்படை வீரர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், அவர்கள் அடிப்படைப் பயிற்சி நெறிகளை கற்றல் வேண்டும்.

ஆ. பயிலுநர்களாக பயிற்சி பெறும் காலப்பகுதியிலும் அதன் பின்னரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கடற்படை வீரர்கள் கடற்படைச் சட்டத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

இ. ஒவ்வொரு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கடற்படை வீரருக்கும் சகல சின்னங்களுடனான சீருடைகள் மற்றும் உபகரணங்கள் என்பன வழங்கப்படும்

ஈ. பயிற்சிக் காலத்தின் போது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கடற்படை வீரர்களுக்கு தங்குமிட வசதி மற்றும் உணவுகள் கடற்படையினால் வழங்கப்படும்.

உ. பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் காலப்பகுதியில் எவரேனுமொரு வீரருக்கு தமது படைவீரர் தன்மையை சுய விருப்புடன் இடைநிறுத்துவதற்கு தேவைப்பட்டால், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மூலம் கடற்படை வீரர் பொருட்டு அது வரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து செலவினங்களையும் குறித்த படைவீரரால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு மீளச் செலுத்தல் வேண்டும்.

ஊ. பயிற்சிக் காலத்தின் போது எந்தவொரு சந்தர்பத்திலும் எவரேனுமொரு கடற்படை வீரரின் துர்நடத்தை காரணமாக அல்லது அவரால் பொறப்புக் கூறவேண்டிய ஏதேனுமோர் காரணத்திற்காக அல்லது அவர் கடற்படை சேவைக்காக பொறுத்தமற்றவரென பொறுப்பிலுள்ளவர்களினால் தீர்மானம் எடுக்கப்படுமேயானால் அந்தச் சந்தர்ப்பத்திலயே சம்பந்தப்பட்ட கடற்படை வீரரால், அதுவரை அவரின் பொருட்டு மேற்கொண்டுள்ள அனைத்து செலவுகளையும் இலங்கை கடற்படைக்கு மீளச்செலுத்துவதற்கு ஒப்புக்கொள்வதாக இலங்கை குடியரசின் பிரதிநிதியாக கடற்படை தளபதியுடன் ஓர் உடன்படிக்கைக்கு வருதல் வேண்டும்.

எ. எல்லா கடற்படை வீரர்களும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எச்சந்தர்ப்பத்திலும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திற்கு அல்லது வெளிநாட்டிற்கு அனுப்பப்படுவதற்கு ஆளாவார்.

8. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்-** தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்தும் வகையில் தற்போதுள்ளதும், இனிவருங் காலங்களில் விதிக்கப்படுகின்றதுமான கட்டளைகள் மற்றும் உறுப்புரைகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல் வேண்டும்.

**9. சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

2020.01.01 ஆம் திகதியிலிருந்து முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை இலக்கம் 03/2016 பிரகாரம் சம்பளம் செலுத்தப்படும். அதற்கமைய,

| | |
|---|---|
| (அ) அடிப்படைச் சம்பளம் | - ரூபா 33,490.00 |
| (ஆ) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு | - ரூபா 7,800.00 |
| (இ) சீருடை பேணுதல் கொடுப்பனவு | - ரூபா 350.00 |
| (ஈ) கஷ்டப் பிரதேச கொடுப்பனவு (நடவடிக்கை பிரதேசங்களின் பொருட்டு) | - அடிப்படைப் பயிற்சியின் பின் உரித்தாகும் |
| (உ) கஷ்டப் பிரதேச கொடுப்பனவு (நடவடிக்கை சேவையல்லாத பிரதேசங்களின் பொருட்டு) | - அடிப்படைப் பயிற்சியின் பின் உரித்தாகும் |
| (ஊ) ஏனைய கொடுப்பனவுகள் | - விசேட கொடுப்பனவு ரூபா 1000.00<br>விசேட மேலதிக கொடுப்பனவு ரூபா 3000.00 |

(எ) இடைக்கால கொடுப்பனவு - ரூபா 5000.00
முழுச் சம்பளம் குறைந்த பட்சம் - ரூபா 50,640.00

(ஏ) இலவசமாக புகையிரதத்தில் பயணிக்க கூடியவாறு மூன்று சோடி புகையிரத அனுமதிப் பத்திரங்கள் ஓராண்டுக்கு (ஏற்றவாறு கடற்படை வீரர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப்போருக்கு) உரித்தாகும்.

(ஐ) முகாமில் வசிக்கும் கடற்படையினருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து தனது சொந்த இருப்பிடத்திற்கு போய்வருவதற்கு மேலதிமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாண அனுமதிப்பத்திரம் அல்லது பேருந்து வண்டி கட்டணம் செலுத்தப்படும்.

(ஒ) இலவசமாக மருத்துவ வசதிகள் வழங்கப்படும். (ஏற்றவாறு கடற்படை வீரர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் தங்கியிருப்போருக்கு)

(ஓ) அரசாங்க குடிமனைகளில் தங்கியிராத திருமணமான கடற்படையினருக்கு ரூபா 2,400.00 இலிருந்து ரூபா 6.600.00 வரை வாடகைக் கொடுப்பனவாக வழங்கப்படும்.

(ஔ) திருமணமான கடற்படையினருக்காக திருமணமாகியவர்களுக்கான தங்குமிடங்களில் வேற்றிடங்கள் ஏற்படும்போது அதற்கமைவாக விடுதிகள் வழங்கப்படும். இதற்கான வாடகையை அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்றவாறு வசூலிக்கப்படும்.

10. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

(அ) விண்ணப்பதாரிகள் பின்வரும் படிவத்தின்படி விண்ணப்பத்தில் எல்லா பந்திகளையும் இயன்ற மட்டும் விபரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பங்கள் 2023, நவெம்பர் மாதம் 13 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "சிரேட்ட பதவிநிலை அலுவலர் (ஆட்சேர்ப்பு), கடற்படை தலைமையகம் த.பெ.இ. 593, கொழும்பு' என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை நிரந்தரக் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவிடம் நேரடியாக கடற்படை வீரர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரத்திற்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாத விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேற்படி விபரங்களை www.navy.lk இணையத்தளத்தில் அல்லது 0117195162, 011-7195155 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனங்களில்/ சபைகளில்/ சிவில்நிறுவனங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பங்கள் தத்தமது திணைக்களத்தின்/சபையின்/கூட்டுத்தாபனத்தின்/குடியியல் நிறுவனத்தின் தலைவர்கள் ஊடாக, தெரிவு செய்தால் விடுவிக்க முடியுமென்ற சான்றிதழுடன் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது அல்லது வேறொரு சந்தர்ப்பத்தில் அழைக்கப்படும் போது விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுகளுக்கு ஏற்புடையதான கல்வித் தகைமைகள் உள்ளதென உறுதிப்படுத்துவதற்கு கல்விச் சான்றிதழ்கள்;

(3) பாடசாலை விலகல் சான்றிதழ்;

(4) 06 மாத காலப் பகுதிக்கு பெறப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்;

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்சார்/ தொழில்நுட்ப பயிற்சி மற்றும் அனுபவம் இருப்பின் அதற்கான சான்றிதழ்கள்;

(6) சமீபத்தில் பெறப்பட்ட மூன்று நற் சான்றிதழ்கள், அதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரினதும், மற்றைய சான்றிதழ்கள் இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பதாரரை அறிந்துள்ளவரான பொறுப்பு வாய்ந்த ஒருவரினதும் அல்லது தற்போது தொழில் வழங்கியுள்ள ஒருவரினதுமாக (தொழில் செய்பவராயின்) இருத்தல் வேண்டும்;

(7) விளையாட்டுத்துறைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை சமர்ப்பிக்கத் தவறியவர்களின் விண்ணப்பங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

(உ) வேறு ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளையோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்பட்டிருப்பின் அவை காணாமற் போதல் தொடர்பாக கடற்படை பொறுப்பு கூறப்படமாட்டாது.

11. விண்ணப்பப்படிவத்தில் பொய்யான கூற்று வழங்கியிருப்பின், அத்தகைய கூற்று விண்ணப்பதாரி தெரிவு செய்வதற்கு முன்னர் அறிய வருமாயின், அவரது பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்வதற்கும், தெரிவு செய்த பின்னர் அறிய வருமாயின் அவரை சேவையிலிருந்து பணி நீக்கம் செய்வதற்கும் உள்ளாதல் வேண்டும்.

12. தெரிவு செய்தல்/நேர்முகப் பரீட்சை முதலியன-

(அ) மேற்கூறப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதாரிகளின் பொருட்டு இலங்கை கடற்படையினால் நடாத்தப்படும் அடிப்படை மருத்துவ சோதனையில் தேர்ச்சியடைதல் வேண்டும். அச்சோதனையில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் கீழ்க் குறிப்பிட்டுள்ள உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைதல் வேண்டும். உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைந்த விண்ணப்பத்தாரிகள் தெரிவுச் சபையின் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தல் வேண்டும்.

(ஆ) உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைவதற்கான தேவைப்பாடுகள் -

| பயிற்சி | நேரம் (நிமிடம்/செக்கன்) | தடவைகள் |
|---|---|---|
| 1600 மீற்றர் ஓட்டம் | 07 நிமிடம் 30 செக்கன் | - |
| Push Up | 02 நிமிடம் | 20 தடவை அல்லது அதற்கு அதிகமாக |
| Sit Up | 02 நிமிடம் | 15 தடவை அல்லது அதற்கு அதிகமாக |
| Arm Bending | 02 நிமிடம் | 07 தடவை அல்லது அதற்கு அதிகமாக |

(இ) நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன அவர்கள் வழங்கியுள்ள கைபேசி இலக்கத்திற்கு ஏற்புடையதான வட்ஸ்அப் செய்தி (Whatsapp) அல்லது இலத்திரனியல் அஞ்சல் மூலம் மட்டும் அறிவிக்கப்படுவதுடன், அஞ்சல் மூலம் அல்லது வேறு எந்தவொரு முறையிலும் அறிவிக்கப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தல் தொடர்பாக பிரயாணச் செலவுகள் அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டாது.

(ஈ) விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆளடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

(உ) இறுதி நேர்முகப் பரீட்சையின் பின்னர் பொருத்தமாகக் கூடியவரான விண்ணப்பதாரிகளை கடற்படை மருத்துவச் சபைக்கு சமுகமளிக்கும் படி தேவைப்படுத்தப்படுவர்.

(ஊ) விண்ணப்பதாரர் ஒருவரை சிபாரிசு செய்வதற்கு எண்ணுகின்ற எவராயினும் அவ்வாறு சிபாரிசு செய்வது, அவருக்கு சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலமேயாகும். விண்ணப்பதாரர் ஒருவரை தெரிவு செய்வதற்கு எவ்விதத்திலேனும் தூண்டுவித்தல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் விண்ணப்பதாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(எ) ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதியற்ற விண்ணப்பதாரிகளுக்கு அது தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு** - இவ் வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுவதுடன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பதங்களுக்கிடையில் ஏதேனுமொரு இணக்கமின்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான பதம் வலுவுடையதாக இருத்தல் வேண்டும்.

யூவீஎம்பீ பெரேரா,
ஆர்எஸ்பீ**, யுஎஸ்பீ, என்டியு, பீஎஸ்சீ,
துணை அத்மிரால்,
இலங்கை கடற்படை தளபதி.

இலங்கை கடற்படைத் தலைமையகம்,
த.பெ. இல. 593,
கொழும்பு 01.

## இலங்கை நிரந்தரக் கடற்படையின் தொழில்வினைஞர் பிரிவிடம் நேரடியாக கடற்படை வீரர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம்

## APPLICATION FOR SAILORS IN THE ARTIFICER (DIRECT ENTRY) BRANCHES OF SRI LANKA REGULAR NAVAL FORCE

1. பிரசை : ..........................................................................................

(இலங்கை பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா, என்பதை குறிப்பிடுக. பதிவு முறையாயின் சான்றிதழின் திகதியையும் இலக்கத்தையும் குறிப்படுக.)

2. விண்ணப்பிக்கும் பிரிவு (முதன்மை அடிப்படையில்) : ..........................................................................................

3. முழுப் பெயர் (தேசிய ஆளடையாள அட்டையின் படி) :..........................................................................................

4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ..........................................................................................

5. நிரந்தர முகவரி : ..........................................................................................

6. அஞ்சல் முகவரி : ..........................................................................................

7. பிறந்த திகதி : ..........................................................................................

8. வயது : வருடங்கள் :................ மாதங்கள் :...................... நாட்கள் : .................. (2023, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதிக்கு)

9. உயரம் :................ (அங்குலம்) மார்பு :................. (அங்குலம்) நிறை :................... (கி.கி.)

10. நிரந்தர முகவரி உரியபொலிஸ் நிலையம் : ..........................................................................................

11. மாவட்டம் : ..........................................................................................

12. தேர்தல் தொகுதி : ..........................................................................................

13. கிராம அலுவலர் பிரிவு :..........................................................................................

14. தொலைபேசி இலக்கம் : ..........................................................................................

15. வட்ஸ்ஏப் (Whatsapp) இலக்கம் : ..........................................................................................

16. திருமணமானவரா/திருமணமாகாதவரா : ..........................................................................................

17. பால் (பெண்/ஆண்) : ..........................................................................................

18. கல்வி கற்ற பாடசாலைகள் (ஒழுங்கு முறையில் குறிப்பிடுக) : ..........................................................................................

19. பாடசாலை /பாடசாலைகள் அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலை/ பல்கலைக்கழகத்தின் பெயர் | சித்தியடைந்த பரீட்சை | பரீட்சைக்கு தோற்றிய வருடம் | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>வேறு | | |

20. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதன் பின்னர் புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக் காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

21. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

| *முழுப் பெயர்* | *பிறந்த இடம்* | *தொழில்* | *தற்கால முகவரி* |
|---|---|---|---|
| தந்தை<br>தாய் | | | |

22. பதவிக்காக உள்ள சிறப்பான தகைமைகள் : ..........................................................................................................................

23. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரங்கள் (நீங்கள் பங்குபற்றிய போட்டிகளையும் விளையாட்டு குழுக்களும் திகதிகளுடன் பெற்ற சாதனைகளுடன் குறிப்பிடுக.) : ..........................................................................................................................

24. பாடசாலையில்/பல்கலைக்கழகத்தில் அல்லது வெளி அமைப்புகளில் பெற்றுள்ள வேறு சாதனைகள் (திகதிகளுடன் பெற்ற சாதனைகளை குறிப்பிடுக). : ..........................................................................................................................

25. ஆயுதப் படையில் அல்லது தொண்டர் படையில் அல்லது பயிலிளவல் படையில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் உள்ள சேவை : ..........................................................................................................................

26. இலங்கை கடற்படையில் அல்லது ஆயுதப் படை ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்காக இதற்கு முன்பு விண்ணப்பித்துள்ளீரா? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பித்தின் பெறுபேற்றினையும் குறிப்பிடுக:

27. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் நீங்கள் குற்றவாளியாக்கப்பட்டு அல்லது பிணையில் விடுபட்டிருந்தீர்களா? அப்படியாயின் விபரங்கள் குறிப்பிடுக : ..........................................................................................................................

28. அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது அரச துறையில்/சபையில்/கூட்டுத் தாபனத்தில் (மத்திய வங்கி/தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டு வியாபாரங்கள், கம்பனிகள் உட்பட) சேவையில் ஈடுப்பட்டிருப்பின் சேவையிலிருந்து விலகியதன் காரணம் : ..........................................................................................................................

29. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| *பெயர்* | *பதவிப் பெயர்* | *அஞ்சல் முகவரி* |
|---|---|---|
| | | |

30. விண்ணப்பதாரரால் ஒப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :

மேலே என்னால் கொடுக்கப்பட்டுள்ள பதில்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் சரியானவை என்று நேர்மையாக உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கடற்படையின் தொழில் கைவினைஞர் பிரிவிற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்கின்ற நடவடிக்கை முறைகளும், அவர்களுக்கு பொருத்தமான விதிமுறைகளும் நான் நன்கு வாசித்து புரிந்துக் கொண்டேன்.

திகதி : .................................... ............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

*10-134*

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /மேலதிக விவாகம் (பொது)
பதிவாளர் பதவி – கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாக பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாக பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தானவராகவும் பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, செத்தெம்பர் 22.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | கட்டான | ரத்தொழுகம பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் அலுத்குரு கோறளை தெற்கு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா. |
| கம்பஹா | மினுவாங்கொடை | உடுகம்பளை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் அலுத்குரு கோறளை வடக்கு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா. |

*10-136*

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

இலங்கை சுங்கத் திணைக்களம்

சுங்க பிரதான பரிசோதகர்கள் மற்றும்
சுங்கப் பரிசோதகர் (தரம் I) ஆகியோர்களுக்கு,

### இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II பதவிக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2023

உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II ஆம் பதவியில் தற்போதுள்ள வெற்றிடங்களில் 15% இனை நிரப்புவதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள,

(அ) சுங்க பிரதான பரிசோதகர்கள் அல்லது

(ஆ) சுங்கப் பரிசோதகர் தரம் I இல் 02 வருட சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்து பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள தரம் I ஐச் சேர்ந்த சுங்கப் பரிசோதகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள்**

1.1. அனுபவம் :

i. சுங்கப் பிரதான பரிசோதகராக அல்லது 02 வருட சேவைக் காலத்துடன் சுங்கப் பரிசோதகர் தரம் I பதவியில் நிரந்தர நியமனமொன்றினைப் பெற்றிருத்தல்.

ii. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்று மதிப்பீட்டு நடைமுறைத் திட்டத்திற்கேற்ப விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னுள்ள 5 வருட காலப்பகுதியில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் செயலாற்றுகையினை வெளிப்படுத்தி இருத்தல்.

1.2. ஏனையவை

i. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் பிரகாரம் குறித்த காலப் பகுதியினுள் ஒழுக்காற்று நடவடிக்கையொன்றுக்கு உட்படாதிருத்தல்.

ii. பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு தேவையான மேலே 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதியான 2023.11.06 ஆந் திகதிக்கு முன்பதாக பூர்த்தி செய்திருப்பது கட்டாயமானதாகும்.

02. விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் "Our Services" என்ற பிரிவின் கீழுள்ள "Online Application – Recruitment Exams" இல் வெளியிடப்பட்டுள்ளதோடு, இதற்காக நிகழ்நிலையில் (Online) மாத்திரம் விண்ணப்பிக்கலாம். நிகழ்நிலையில் (Online) விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 2023.11.06 ஆந் திகதியாகும். நிகழ்நிலை வழியாக விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்வதானது, 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு ஆரம்பமாகி, 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடையும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் தினம் முதல் மூன்று (3) நாட்களுக்கு விண்ணப்பப்படிவங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளைத் திருத்துவதற்கான வசதிகள் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலையில் சமர்ப்பித்ததன் பின்னர் அதனை பதிவிறக்கஞ் செய்து, அதன் அச்சுப் பிரதியிலுள்ள உரிய பகுதிகளை கையெழுத்தினால் நிரப்பி விண்ணப்பதாரர் கையொப்பத்தினை உறுதிப்படுத்தி, உரிய நிறுவனத் தலைவரின் சான்றுபடுத்தலுடன் விண்ணப்பப்படிவங்கள் கையேற்கப்படுகின்ற இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெறும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நிகழ்நிலை (Online) வழியான விண்ணப்பப்படிவங்களை ஆங்கிலமொழியில் மாத்திரம் பூரணப்படுத்தல் வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலை வழியாக மென் பிரதி வடிவில் அனுப்பப்பட்ட பிரதி மற்றும் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட அச்சுப் பிரதி (Printout) என்பன பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றதன் பின்னர், மென் மற்றும் வன் பிரதிகள் சரிபார்க்கப்படுவதோடு (verify), செல்லுபடியான விண்ணப்பப்படிவம் என திணைக்களத்தினால் கையேற்கப்பட்டது / கையேற்கப்படவில்லை என வலையமைப்பிற்கு நுழைவதற்காக பயன்படுத்தப்படுகின்ற செல்லிட தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தியொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலம் விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை வழியில் விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பது எவ்வாறு என்பது குறித்து தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை (Instructions) விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்கையில் இந்த வழிகாட்டுதல்கள் கட்டாயமாகப் பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியில் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு திருத்தமும் செல்லுபடியானதாக கருதப்படமாட்டாது. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் யாவும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கையேற்கப்படுகின்ற இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இப் பரீட்சைக்கான கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தினை செலுத்துகையில் நிகழ்நிலை வழியாக ஏற்படுத்தப்பட்டுள்ள பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளில் கீழ் மாத்திரம் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

(i) ஏதேனும் வங்கியொன்றின் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

(ii) நிகழ்நிலையில் கொடுப்பனவு செய்வதற்காக செயலாக்கம் செய்யப்பட்ட பற்று அட்டைமூலம் (Debit Card with Online Payment Facility)

(iii) இலங்கை வங்கியின் ஆன்லைன் பேன்கிங் முறைமை மூலம் (Online Banking Method, Bank of Ceylon)

(iv) ஏதேனும் இலங்கை வங்கிக்கிளையொன்றின் மூலம் (Slip Payment Bank of Ceylon)

**குறிப்பு** :-

(அ) மேற்குறித்த முறைமை மூலம் கொடுப்பனவினை மேற்கொள்கின்ற முறை தொடர்பிலான வழிகாட்டல்கள் இணையதளத்தில் பரீட்சைகளுக்கான தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றது எனக் குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் முழுமையாக செலுத்தப்படுதல் வேண்டும். கட்டணம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கட்டண முறையின் கீழ் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துவதில் ஏற்படும் தாமதங்களை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) இக்கட்டணமானது எச்சந்தர்ப்பத்திலும் மீள செலுத்தப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

*03.* இப்பரீட்சையானது எழுத்துப் பரீட்சை மற்றும் பொது நேர்முகப் பரீட்சை ஆகிய இரு பகுதிகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு பரீட்சைக்குமான புள்ளிகள் மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள நேரம் வருமாறு :

**பகுதி I - எழுத்துப் பரீட்சை**

| | மொத்தப் புள்ளிகள் | கடவுப் புள்ளிகள் |
|---|---|---|
| (01) பொது உளச்சார்புப் பரீட்சை (01 மணித்தியாலம்) | 100 | 50 |
| (02) ஆங்கில மொழி (1 ½ மணித்தியாலங்கள்) | 100 | 50 |
| (03) சுங்கச் சட்டம் மற்றும் நடைமுறை (03 மணித்தியாலங்கள்) | 100 | 50 |

**பகுதி II -** பொது நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது)
பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ளனரா என்பதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து, உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களின் புள்ளிகளின் தகைமை இறங்கு வரிசைக்கு அமைய பதவியில் வெற்றிடமாகவுள்ள எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலான தொகையினரை ஆட்சேர்ப்பதற்கு முடியுமாக்கும் வகையில் போதுமானளவிலான விண்ணப்பதாரர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டு, தகைமைகள் உறுதிப் படுத்தப்பட்டதன் பின்னர் ஆட்சேர்க்கப்படும்.

இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் சகல பரீட்சைக்கும் ஒரு மொழியிலேயே தோற்ற வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பரீட்சையின் மொழியினை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தற்போதுள்ள சேவைக்கு உள்வாங்குவதற்கு தகுதிபெற்ற மொழியில் இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்க முடியும். பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேற்றினை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதியானதாகும்.

*04.* இப்பரீட்சையின் பாடங்களது பாடத்திட்டமானது வருமாறு:

*4.1* "**பொது உளச்சார்பு**" வினாத்தாள் தொடர்பிலான பாடத்திட்டம்

மொழித் தேர்ச்சி மற்றும் தர்க்க சக்தி, புள்ளிவிபரவியல் ஆற்றல், பொது நுண்ணறிவு மற்றும் பகுப்பாய்வுத் திறன் என்பனவற்றினை அளவிடும் வகையில் பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளிக்கும் மாதிரியில் ஐம்பது (50) வினாக்களைக் கொண்டிருக்கும்.

*4.2* "ஆங்கில மொழி" பரீட்சைக்கான பாடத் திட்டம்

ஆங்கில மொழியில் வாசிப்பு, எழுத்து, கிரகித்தல் மற்றும் தொடர்பாடல் திறன்களை அளவிடுவதற்காக தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரமாகும்.

*4.3* "சுங்க சட்டம் மற்றும் நடைமுறைகள்" வினாத்தாளுடன் சம்பந்தப்பட்ட பாடத்திட்டம் :

i.

- கடல் மார்க்க/ ஆகாய மார்க்கமான சரக்குகளை ஏற்றுதல், இறக்குதல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் வெளியாக்குதல்.
- இறக்குமதி களஞ்சியசாலையொன்றில் பொறுப்பாகவுள்ள உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II அவர்களது கடமைகள்.
- நீலப் புத்தகத்தினைப் பூர்த்தி செய்தல்.
- மதுபானக் களஞ்சியசாலையில் பொறுப்பாகவுள்ள உதவி சுங்க அத்தியட்சகர் தரம் II அவர்களது கடமைகள்.

ii. ஏற்றுமதிகள் :

- தரையிறங்குவதற்காகப் பெறப்பட்ட சரக்கு தொடர்பில்.

  பின்பற்றப்படும் நடைமுறை.

- ஏற்றுமதி விபரங்களை நுண்ணாய்வு செய்தல்.
- இருப்புக் கையேட்டினை பேணுதல்.

iii. மாற்றி ஏற்றல் சரக்கு :

- கடல் மார்க்கப் பொருட்கள் தொடர்பிலான பொதியிலடைக்கப்பட்ட சரக்கு மற்றும் பொதியிலடைக்கப்படாத சரக்கு
- மாற்றி ஏற்றல் பொருட்பட்டியல்களை தயாரித்தல்
- கரையோர கப்பல் சரக்கு

iv. பிணைப்படுத்தப்பட்ட களஞ்சியசாலைகளுடன் தொடர்புபட்ட வெளியாக்கல் செயல்முறை

v. பொது - மீளளிப்புச் செய்தல் மற்றும் மீளளிப்பினை அனுமதிப்பது தொடர்பிலான நிபந்தனைகள்

- தீர்வைக் கட்டண மீளளிப்பு தொடர்பில் தாக்கம் செலுத்துகின்ற ஒழுங்குவிதிகள், மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தடை செய்யப்பட்ட பொருட்களது அட்டவணை - நாட்டுக்குள்ளும் மற்றும் நாட்டிலிருந்து வெளியேயும்,
- சுங்க கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தாத சரக்குகள், பிழையான பிரகடனம் மற்றும் பொருட்களது பெறுமதியினை குறைத்து மதிப்பிடல் ஆகியவை தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்காக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள்
- பரிசோதனை செய்தல் மற்றும் தடுப்புக் காவலில் வைத்தல் என்பவை தொடர்பில் சுங்கக் கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள நடைமுறைகள்.
- சட்ட ரீதியற்ற முறையில் பண்டங்களைப் போக்குவரத்து செய்தலுக்குகெதிராக நடவடிக்கை எடுப்பதற்காக சுங்கக் கட்டளைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அலுவலர்களது கடமைகளுடன் தொடர்புபட்ட சகல திணைக்களக் கட்டளைகள்

05. 5.1 பொது உளச்சார்புப் பரீட்சை, ஆங்கிலம், சுங்கச் சட்டம் மற்றும் நடைமுறை போன்ற மூன்று (03) பாடங்களில் ஒவ்வொன்றிலும் ஆகக் குறைந்தது 50 புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து மற்றும் நேர்முகப் பரீட்சையில் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் குறித்த ஆட்சேர்ப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய நியமனங்களை வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவதோடு, ஆட்சேர்ப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களில் 10% இற்கு மேற்படாத வெற்றிடங்கள் பெண் விண்ணப்பதாரர்களுக்கும் ஒதுக்கப்படும்.

5.2 பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்

மேலே 5.1 ஆம் பந்திக்கு அமைய தகுதிபெறுகின்ற விண்ணப்பதாரர்களின் பெயர்கள் அடங்கிய பெறுபேறுப் பட்டியல் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு கையளிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத் தளமான ஊடாக பரீட்சைப் பெறுபேறுகளை அறிவிப்பதற்காக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

06 6.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நபர்களினால் மாத்திரம் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனும் ஊகத்தின் பேரில், விண்ணப்பங்களை சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டதும் பரீட்சைத் திணைக்களம் அது தொடர்பாக பத்திரிகை அறிவிப்பொன்றினை வெளியிடும். அவ் அறிவித்தல் வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் பரீட்சைகள் ஏற்பாட்டுக் கிளையில் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கையில் விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி, என்பனவற்றை சரியாகக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பின் வெளிப்பிரதேசத்தில் வசிப்பவராயின், மேலே

குறிப்பிட்ட விடயங்களுடன் அனுமதி அட்டையினைத் துரிதமாக அனுப்புவதற்கான பெக்ஸ் இலக்கம், குறிப்பிட்ட கோரிக்கை கடிதமொன்றினை அனுப்புவதன் மூலம் திணைக்களத்தினை தொடர்புகொள்ளவதற்கு மிகவும் பொருத்தமாகவிருக்கும்.இதன்போது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்ட ஏதேனுமொரு தகவலினை உறுதிப்படுத்துவதற்காக தம்முடன் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் பதிவுத்தபால் பற்றுச் சீட்டு என்பனவற்றினை தயார்நிலையில் வைத்திருப்பது பிரயோசனமாக இருக்கும்.

6.2. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவருக்கு பரீட்சை மண்டபத்தில் ஒதுக்கப்பட்டுள்ள சுட்டிலக்கத்திற்கு இணங்க பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற ஒவ்வொரு விண்ணப்பதாரியும், பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

6.3. பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்குமாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்கள் திருப்தியுறும் வகையில் தமது சுய ஆள் அடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்றினை அவர்கள் சமர்ப்பிக்கலாம் :

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான வாகன சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே, விண்ணப்பதாரிகள் தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு முடியுமான வகையில் முகங்களையும் காதுகளையும் திறந்த நிலையில் பரீட்சை நிலையத்தினுள் நுழைய வேண்டும். மேலும், தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை நிலையத்தினுள் நுளைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை நிலையத்தினுள் நுழைந்தது முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரையில் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களுக்கு விண்ணப்பதாரர்களை ஆள் அடையாளம் காணும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் திறந்த நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

07 7.1 விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டையினை வழங்குவதானது, விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றாக கருதுதல் ஆகாது.

7.2 இப் பரீட்சையானது 2024 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படுகின்ற திகதி மற்றும் இடம் என்பன பின்னர் அறிவிக்கப்படும்.

08. பரீட்சையினை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றிற்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். அவ்வாறு கட்டுப்படாத அல்லது சட்டதிட்டங்களை மீறுகின்ற பரீட்சார்த்திகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டணைகளுக்கு ஆளாக நேரிடலாம்.

09. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலில் ஏதேனும் முரண்பாடு அல்லது பொருத்தமின்மை காணப்படின் அவ்வேளை சிங்கள மொழியில் வெளியிடப்படுகின்ற அறிவித்தலே மேலோங்கிக் காணப்படும். இங்கு குறிப்பிடப்படாத விடயம் ஏதுமிருப்பின் அது தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகம் தீர்மானத்தினை மேற்கொள்வார்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம்,
இலங்கை சுங்கத் திணைக்களம்.

"சுங்க இல்லம்",
இல. 40, பிரதான வீதி.
கொழும்பு 11.

10-243

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.